**கவனிக்க.**- இவ் வர்த்தமானி பகுதி VI இல் 2021 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2242 - 2021 අගෝස්තු මස 20 වැනි සිකුරාදා - 2021.08.20

2242 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 890 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 899 |


**கவனிக்க.**- (i) குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தம்) சட்டமூலம் 2021, யூலை மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) யூஎன்வீ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, யூலை மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2021, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஒகத்து மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


889 - B 082260 - 353 (2021/08)

# காணி அபிவிருத்தி கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் பிரிவின் வழங்கப்பட்ட அளிப்புகளை (104 ஆம் பிரிவு) இன் கீழ் இரத்துச் செய்தல் தொடர்பான அறிவித்தல்

*அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவுக்கேற்ப 1986 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதிய 128 ஆம் இலக்க புலஸ்திகமயில் வசிக்கும் அலுத்கெதர ரம்பண்டா என்பவருக்கு பொ/பிர/ 8812 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பராதீனம் செய்யப்பட்ட பொலொன்னறுவ மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1990.07.19 ஆந் திகதிய 3/ 2/ 144 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட காணிக்கு சட்ட ரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால்/இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை என பிரதேச செயலாளர் பிரிவின்ன பிரதேச செயலாளர் வீரகோன் முதியன்சேலாகே இந்திக கருணாரத்ன ஆகிய நான் இவ்வறிவித்தல் மூலம் இத்தால் அறியத்தருகிறேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் மேற்கூறிய அளிப்பை இரத்துச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2021.09.10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்திலான சமர்ப்பணம் மூலம் எனக்குத் தெரிவித்தல் வேண்டும்.*

**அட்டவணை**

*வடமத்திய மாகாணத்தில் பொலன்னறுவை நிருவாக மாவட்டத்தில் லங்காபுர பிரதேச செயலாளர் பிரிவில் மத்திய பகுதியில் 78ஏ ஆம் இலக்க கூமனடிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அபயபுர எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை நாயகத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட அ. ஜ. பி. பொ. 70 எனும் பிரதிப்படத்தில் உள்ளடங்கிய 45 எனக் காட்டப்பட்டதும் 01 ஏக்கர் 00றூட் 08 பேர்ச்சஸ் விஸ்தீரணம் உள்ளதுமானஅரச காணி. அதன் எல்லைகள் வருமாறு- கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணி–*

*வடக்கு : 42 ;*
*கிழக்கு : 81 ;*
*தெற்கு : 55 ;*
*மேற்கு : 44.*

*டபிள்யூ. எம். ஐ. கருணாரத்ன,*
*பிரதேச செயலாளர்,*
*லங்காபுர.*

*பிரதேச செயலகம்,*
*லங்காபுர,*
*2019, யூலை 22.*

*08-335*

---

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், பலாகல பிரதேச செயலகம், பிரதேச செயலாளர்/ துணை நில ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையில்) ஆர். ஏ. ஜீ. டபிள்யூ. எம். அதுல செனரத் பண்டார ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 19(4) இன்கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1996, ஒகத்து 28 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அநு/ பலா/ பிர/ 391 கொண்ட உரித்துப்பத்திரத்தின் சொந்தக்காரரான கம்சபா ஹல்மில்லவெவ இல் வசிக்கும் வர்ணகுலசூரிய*

ரீடா மானேல் பிரனான்து அவர்களுக்கு வழங்குவதுடன், அநுராதபுர மாவட்டக் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் T4/ 97 இன் கீழ் 2014, ஓகத்து 14 ஆந் திகதியன்று பதிவுசெய்யப்பட்ட கீழ் உள்ள உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்துக்கு பதில் உரிமையாளர் ஆவதற்கு உரிமை இருந்தும் அவர் அதற்கு விருப்பமில்லாதவிடத்து, பதில் உரிமையாளர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு இன்மை ஆகையால், அந்த உரிமமப்பத்திரத்தை மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 104 ஆம் உப பந்தியின்கீழ் வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருக்குமாயின் அதை 2021.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக என்னிடம் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

அநுராதபுரம் நிர்வாக மாவட்டத்தில் பலாகல பிரதேச செயலாளர் பிரிவில் தெற்கு கலாகம்பத்து/ கோரளயில் 691-கம்சபாஹல்மில்லவெவ கிராம அலுவலர் பிரிவில் மிரிஹம்பிடிகம எனும் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள - என்பவரின் பொறுப்பில், நில அளவையியலாளர் நாயகத்தின் பதிவு இலக்கம் - கொண்ட புல வரைபடத்தில்/ - ஆல் பதியப்பட்ட இலக்கம் - ஐக் கொண்ட முகாமைத்துவ வரைபடத்தில்/ - ஆல் பதிவு செய்யப்பட்ட இலக்கம் - கொண்ட நிரல் வரைபடத்தில் இலக்கம் கொண்ட நிலப்பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவில் ஹெக்டயார்/ஏக்கர் 0.084 றூட் - பேர்ச்சஸ் - என அளவைக் கொண்ட கீழ்க்காணப்படுகின்றவாறான எல்லைகளைக் கொண்ட அரச காணி :

வடக்கு : டபிள்யூ. ஏ. அபேசிங்ஹ அவர்களுடைய காணி ;
கிழக்கு : கலேவல - கெக்கிராவ பாதை ;
தெற்கு : கரகொலகல ;
மேற்கு : கரகொலகல.

ஏ. எஸ். பண்டார,
பிரதேச செயலாளர்,
பலாகல.

பிரதேச செயலகம்,
பலாகல,
2021, மாச்சு 22.

08-336/ 1

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், பலாகல பிரதேச செயலகம், பிரதேச செயலாளர்/ துணை நில ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையில்) ஆர். ஏ. ஜீ. டபிள்யூ. எம். அதுல செனரத் பண்டார ஆகிய நான், நில மேம்பாட்டுத் திருத்தச் சட்டத்தின் உப பிரிவு 19(4) இன்கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1996, ஒற்றோபர் 11 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அநு/ பலா/ பிர/ 2853 கொண்ட உரித்துப்பத்திரத்தின் சொந்தக்காரரான பமுனுகம, பலாகல இல் வசிக்கும் கச்சாகே குணதிலக அவர்களுக்கு வழங்குவதுடன், அநுராதபுர மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் T / 11/ 35 இன் கீழ் 2015, நவெம்பர் 18 ஆந் திகதியன்று பதிவுசெய்யப்பட்ட கீழ் உள்ள உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்துக்கு பதில் உரிமையாளர் ஆவதற்கு சட்ட ரீதியான உரிமை உள்ள ஒருவராக இல்லாதவிடத்து அல்லது பதில் உரிமையாளர் ஆவதற்கு உரிமை இருந்தும் அவர் அதற்கு விருப்பமில்லாதவிடத்து, பதில் உரிமையாளர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு இன்மை ஆகையால், அந்த உரிமப்பத்திரத்தை மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 104 ஆம் உப பந்தியின்கீழ் வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருக்குமாயின் அதை 2021.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக என்னிடம் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

அநுராதபுரம் நிர்வாக மாவட்டத்தில் பலாகல பிரதேச செயலாளர் பிரிவில் தெற்கு கலாகம் பத்து/ கோரளயில் 691-கம்சபாஹல்மில்லவெவ கிராம அலுவலர் பிரிவில் பமுனுகம எனும் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள - என்பவரின் பொறுப்பில், நில அளவையியலாளர் நாயகத்தின் பதிவு இலக்கம் - கொண்ட புல வரைபடத்தில்/ - ஆல் பதியப்பட்ட இலக்கம்

– ஐக் கொண்ட முகாமைத்துவ வரைபடத்தில்/ – ஆல் பதிவு செய்யப்பட்ட இலக்கம் – கொண்ட நிரல் வரைபடத்தில் இலக்கம் கொண்ட நிலப்பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவில் 1/ 2 ஏக்கர் 0 றூட் 0 பேர்ச்சஸ் – என அளவைக் கொண்ட கீழ்க்காணப்படுகின்றவாறான எல்லைகளைக் கொண்ட காணி :

வடக்கு : வீ. சுத்தானி அவர்களுடைய காணி ;
கிழக்கு : தெவட பாதை ;
தெற்கு : எப்ரஹாம் சிங்ஞோ அவர்களது காணி ;
மேற்கு : அரச காடு.

ஏ. எஸ். பண்டார,
பிரதேச செயலாளர்,
பலாகல.

பிரதேச செயலகம்,
பலாகல,
2021, மாச்சு 22.

08-336/ 2

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், பலாகல பிரதேச செயலகம், பிரதேச செயலாளர்/ துணை நில ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையில்) ஆர். ஏ. ஜீ. டபிள்யு. எம். அதுல செனரத் பண்டார ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 19(4) இன்கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1996, ஓகத்து 19 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அநு/ பலா/ பிர/ 2921 கொண்ட உரித்துப்பத்திரத்தின் சொந்தக்காரரான கல்பாய, தேவதுவ இல் வசிக்கும் குமாரசிங்க ஆரச்சிலாகே சுனில் குமாரசிங்க அவர்களுக்கு வழங்குவதுடன், அநுராதபுர மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 428/ 58 இன் கீழ் 2001, ஓகத்து 14 ஆந் திகதியன்று பதிவுசெய்யப்பட்ட கீழ் உள்ள உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்துக்கு பதில் உரிமையாளர் ஆவதற்கு சட்ட ரீதியான உரிமை உள்ள ஒருவராக இல்லாதவிடத்து அல்லது பதில் உரிமையாளர் ஆவதற்கு உரிமை இருந்தும் அவர் அதற்கு விருப்பமில்லாதவிடத்து, பதில் உரிமையாளர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு இன்மை ஆகையால், அந்த உரிமப்பத்திரத்தை மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 104 ஆம் உப பந்தியின்கீழ் வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருக்குமாயின் அதை 2021.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக என்னிடம் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

அநுராதபுரம் நிர்வாக மாவட்டத்தில் பலாகல பிரதேச செயலாளர் பிரிவில் தெற்கு கலாகம் பத்து/கோரளயில் 676-மொரத்தேகம கிராம அலுவலர் பிரிவில் கல்பாய எனும் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள – என்பவரின் பொறுப்பில், நில அளவையியலாளர் நாயகத்தின் பதிவு இலக்கம் – கொண்ட புல வரைபடத்தில்/ – ஆல் பதியப்பட்ட இலக்கம் – ஐக் கொண்ட முகாமைத்துவ வரைபடத்தில்/ – ஆல் பதிவு செய்யப்பட்ட இலக்கம் – கொண்ட நிரல் வரைபடத்தில் இலக்கம் கொண்ட நிலப்பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவில் 0.468 றூட் என அளவைக் கொண்ட கீழ்க்காணப்படுகின்றவாறான எல்லைகளைக் கொண்ட காணி :

வடக்கு : பிரிவு இலக்கம் 110 மற்றும் 111 ;
கிழக்கு : பாதை ;
தெற்கு : பிரிவு இலக்கம் 127 ஐக் கொண்ட இடம் ;
மேற்கு : பாதை.

ஏ. எஸ். பண்டார,
பிரதேச செயலாளர்,
பலாகல.

பிரதேச செயலகம்,
பலாகல,
2021, மாச்சு 08.

08-336/ 3

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், பலாகல பிரதேச செயலகம், பிரதேச செயலாளர்/ துணை நில ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையில்) ஆர். ஏ. ஜீ. டபிள்யூ. எம். அதுல செனரத் பண்டார ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 19(4) இன்கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1996, யூன் 10 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அநு/ பலா/ பிர/ 1208 கொண்ட உரித்துப்பத்திரத்தின் சொந்தக்காரரான திக்வென்னாகம, கல்கிரியாகம இல் வசிக்கும் தென்னகோன் முதியன்சேலாகே கருணாரத்ன பண்டார அவர்களுக்கு வழங்குவதுடன், அநுராதபுர மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 434/ 127 இன் கீழ் 2001, நவெம்பர் 15 ஆந் திகதியன்று பதிவுசெய்யப்பட்ட கீழ் உள்ள உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்துக்கு பதில் உரிமையாளர் ஆவதற்கு சட்ட ரீதியான உரிமை உள்ள ஒருவராக இல்லாதவிடத்து அல்லது பதில் உரிமையாளர் ஆவதற்கு உரிமை இருந்தும் அவர் அதற்கு விருப்பமில்லாதவிடத்து, பதில் உரிமையாளர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு இன்மை ஆகையால், அந்த உரிமப்பத்திரத்தை மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 104 ஆம் உப பந்தியின்கீழ் வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருக்குமாயின் அதை 2021.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக என்னிடம் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்படுகின்றது.*

**அட்டவணை**

*அநுராதபுரம் நிர்வாக மாவட்டத்தில் பலாகல பிரதேச செயலாளர் பிரிவில் தெற்கு கலாகம் பத்து/ கோரளயில் 675-எல்லவெவ கிராம அலுவலர் பிரிவில் எல்லவெவ எனும் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள - என்பவரின் பொறுப்பில், நில அளவையியலாளர் நாயகத்தின் பதிவு இலக்கம் - கொண்ட புல வரைபடத்தில்/ - ஆல் பதியப்பட்ட இலக்கம் - ஐக் கொண்ட முகாமைத்துவ வரைபடத்தில்/ - ஆல் பதிவு செய்யப்பட்ட இலக்கம் - கொண்ட நிரல் வரைபடத்தில் இலக்கம் கொண்ட நிலப்பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவில் 0.400 ஏக்கர் என அளவைக் கொண்ட கீழ்க்காணப்படுகின்றவாறான எல்லைகளைக் கொண்ட காணி :*

*வடக்கு : ஆர். எம். வீ. ஜீ. களுபண்டாவின் காணி ;*
*கிழக்கு : இலக்கம் 148 உடைய காணி ;*
*தெற்கு : காணிப் பிரிவுகளுக்கிடையிலான பாதை ;*
*மேற்கு : காணிப் பிரிவகளுக்கிடையிலான பாதை.*

*ஏ. எஸ். பண்டார,*
*பிரதேச செயலாளர்,*
*பலாகல.*

*பிரதேச செயலகம்,*
*பலாகல,*
*2021, மாச்சு 08.*

*08-336/ 4*

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது உறுப்புரையின் (4) ஆவது உப உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாண சபையின் அநுராதபுர மாவட்டத்தின் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பீ. ஜீ. சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உறுப்புரையின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1982.03.29 ஆந் திகதி அளிக்கப்பட்ட அனு/ பி. செ./ 1223 ஆம் இலக்கத்தின் உரித்துக்காரரான ராஜாங்கனை தெற்குமுனை வட்டார இலக்கம் 12 இல் வசிக்கும் புன்சிராளகே பத்தரால என்பவருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளதும் அனுராதபுரம் மாவட்ட காணிப்பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 1224 இன்கீழ் 1982.06.10 ஆந் திகதிய நு. ப. மே./ 1/ 1223 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்ட ரீதியான*

*பின்னுரித்தாளராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ளபோதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ளபோது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதை இத்தால் அறியத்தருகிறேன். இது பற்றி யாதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அது பற்றி 2021.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.*

**அட்டவணை**

*வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் நுவரகம்பலாத்த மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் விலச்சிய தெற்கு கோரளே/ பத்துவே இல. 5ஏ கிராம அலுவலரின் பகுதியில் உள்ள ராஜாங்கனைய வட்டார இலக்கம் 12 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ......................... ஆம் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் இ. கு. வ. இ. 21 இல் 25 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான சைபர் ஏக்கர் ஒரு றூட் முப்பத்தெட்டு பேர்ச் (0ஏ. 1றூ. 38பே.) பரப்பளவுள்ளதும் "ராஜாங்கனய வத்த" என அழைக்கப்படுவதுமான பின்வரும் எல்லைகளைக் கொண்ட அரச காணித்தண்டு :*

*வடக்கு : காணித்துண்டு இலக்கம் 13 ;*
*கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 24 ;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கம் 29, பாதை ;*
*மேற்கு : காணித்துண்டு இலக்கம் 26.*

*பீ. ஜீ. சுனில் அபேகோன்,*
*பிரதேச செயலாளர்,*
*ராஜாங்கனை.*

*பிரதேச செயலகம்,*
*ராஜாங்கனை,*
*2021, பெப்புருவரி 18.*

*08-337/ 1*

---

இணைப்பு *9*

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது உறுப்புரையின் (4) ஆவது உப உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் (104 ஆம் உறுப்புரை) தொடர்பான அறிவித்தல்**

*வடமத்திய மாகாண சபையின் அநுராதபுர மாவட்டத்தின் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பீ. ஜீ. சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உறுப்புரையின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1998.10.07 ஆந் திகதி அளிக்கப்பட்ட அனு/ ராஜா/ பி./ 4180 ஆம் இலக்கத்தின் உரித்துக்காரரான ராஜாங்கனை வட்டார இலக்கம் 11 இல் வசிக்கும் யத்தெஹிகே விலியம் என்பவருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளதும் அனுராதபுரம் மாவட்ட காணிப்பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 1977 இன்கீழ் 1999.04.23 ஆந் திகதிய 340/ 17 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ளபோதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ளபோது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அது பற்றி 2021.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.*

**அட்டவணை**

*வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவில் விலச்சிய தெற்கு கோரளே/ பத்துவே, 453 ஆம் இலக்க எனும் கிராம அலுவலர் பகுதியில் உள்ள வட்டார இலக்கம் 11 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 01 ஆம் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் இ. கு. வ. இ. 16 இல் 21 ஆம் இலக்க காணித்துண்டு எனக்*

குறிப்பிடப்பட்டுள்ளதுமான இரண்டு ஏக்கர் ஒரு றூட் இருபத்துநான்கு பேர்ச் (0ஏ. 1றூ. 24பே.) பரப்பளவுள்ளதும் ராஜாங்கனய வயல் என அழைக்கப்படுவதுமான பின்வரும் எல்லைகளைக் கொண்ட அரச காணித்துண்டு (வயற் காணி) :

வடக்கு : வாய்க்கால் மற்றும் பாதை ஒதுக்கம் ;
கிழக்கு : வாய்க்கால் மற்றும் பாதை ஒதுக்கம் ;
தெற்கு : வாய்க்கால் மற்றும் பாதை ஒதுக்கம் ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 22.

பீ. ஜீ. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
ராஜாங்கனை.

பிரதேச செயலகம்,
ராஜாங்கனை,
2021, பெப்புருவரி 15.

08-337/ 2

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது உறுப்புரையின் (4) ஆவது உப உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் (104 ஆம் உறுப்புரை) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாண சபையின் அநுராதபுர மாவட்டத்தின் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பீ. ஜீ. சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உறுப்புரையின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1990.10.30 ஆந் திகதி அளிக்கப்பட்ட அனு/ பி./ 21075 இன் உரித்துக்காரரான ராஜாங்கனை, தெற்கு முனை, வட்டார இலக்கம் 10 இல் வசிக்கும் பண கியனகே பேமசிறி என்பவருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளதும் அனுராதபுரம் மாவட்ட காணிப்பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 30110 இன்கீழ் 1997.12.18 ஆந் திகதி நு. ப. மே/ 282/ 126 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ளபோதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ளபோது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதுபற்றி 2021.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.

### அட்டவணை

வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் நுவரகம் பலாத்த மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் விலச்சிய தெற்கு, 5ஏ ஆம் இலக்க கிராம அலுவலர் பகுதியில் உள்ள ராஜாங்கனய வட்டார இலக்கம் 10 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 01 ஆம் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் இ. கு. வ. இ. 15 இல் 174 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான சைபர் ஏக்கர் இரண்டு றூட் நான்கு பேர்ச் (0ஏ. 2றூ. 4பே.) பரப்பளவுள்ளதும் “ராஜாங்கனய வத்த” என அழைக்கப்படுவதுமான பின்வரும் எல்லைகளைக் கொண்ட அரச காணித்துண்டு :

வடக்கு : மேட்டு நிலம் இலக்கம் 172 மற்றும் 173 ;
கிழக்கு : குடியேற்றப் பாதை இலக்கம் 179 ;
தெற்கு : குடியேற்றப் பாதை இலக்கம் 179 ;
மேற்கு : மேட்ட நிலம் இலக்கம் 175.

பீ. ஜீ. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
ராஜாங்கனை.

பிரதேச செயலகம்,
ராஜாங்கனை,
2021, மார்ச்சு 29.

08-337/ 3

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது உறுப்புரையின் (4) ஆவது உப உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் (104 ஆம் உறுப்புரை) தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாண சபையின் அநுராதபுர மாவட்டத்தின் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பிகிலிஎலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உறுப்புரையின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1982.06.23 ஆந் திகதி அளிக்கப்பட்ட அளிப்பு இலக்கம் அனு/ பி./ 2706 இன் உரித்துக்காரரான ராஜாங்கனை, தெற்குக் கரை, வட்டார இலக்கம் 17 இல் வசிக்கும் திரு. பின்ஹாமிகே மெனிக்ரால என்பவருக்கு அளிக்கப்பட்டுள்ளதும் அனுராதபுரம் மாவட்ட காணிப்பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 174 இன்கீழ் 1983.04.19 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ளபோதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ளபோது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதுபற்றி 2021.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.*

**அட்டவணை**

*வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் நுவரகம் பலாத்த மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் விலச்சிய தெற்கு கோரளே, 5-பீ ஆம் இலக்க கிராம அலுவலர் பகுதியில் உள்ள ராஜாங்கன தெற்குக் கரை, வட்டார இலக்கம் 17, பகளமாறகஹவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்ட 01 ஆம் இலக்க களத்தாளில் இலக்கம் இ. கு. வ. இ. 10 ஆம் இலக்க வரைபடத்தில் 254 2/ 2 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான இரண்டு ஏக்கர் இரண்டு றூட் இருபது பேர்ச் (2ஏ. 2றூ. 20பே.) பரப்பளவுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்ட அரச காணித்துண்டு :*

*வடக்கு : மேட்டு நிலம் இலக்கம் 62, 253, 252, 250 ;*
*கிழக்கு : வயற்காணி இடம் இலக்கம் 255 ;*
*தெற்கு : தம்மென்னாவெவ ;*
*மேற்கு : தொட்டவல மூகலான.*

*பீ. ஜீ. சுனில் அபேகோன்,*
*பிரதேச செயலாளர்,*
*ராஜாங்கனை.*

*பிரதேச செயலகம்,*
*ராஜாங்கனை,*
*2021, மார்ச்சு 09.*

*08-337/ 4*

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், பலாகல பிரதேச செயலகம், பிரதேச செயலாளர்/ துணை நில ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையில்) ஆர். ஏ. ஜீ. டபிள்யூ. எம். அதுல செனரத் பண்டார ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 19(4) இன்கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1996, பெப்புருவரி 28 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அநு/ பலா/ பிர/ 429 கொண்ட உரித்துப்பத்திரத்தின் சொந்தக்காரரான கம்சபாஹல்மில்லவெவ இல் வசிக்கும் தெல்கஹவத்தே கெதர ரணசிங்ஹ அவர்களுக்கு வழங்குவதுடன், அநுராதபுர மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம்*

T/ 17/ 126 இன் கீழ் 2017, ஒற்றோபர் 12 ஆந் திகதியன்று பதிவுசெய்யப்பட்ட கீழ் உள்ள உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்துக்கு பதில் உரிமையாளர் ஆவதற்கு சட்ட ரீதியான உரிமை உள்ள ஒருவராக இல்லாதவிடத்து அல்லது பதில் உரிமையாளர் ஆவதற்கு உரிமை இருந்தும் அவர் அதற்கு விருப்பமில்லாதவிடத்து, பதில் உரிமையாளர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு இன்மை ஆகையால், அந்த உரிமப்பத்திரத்தை மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 104 ஆம் உப பந்தியின்கீழ் வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருக்குமாயின் அதை 2021.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக என்னிடம் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

அநுராதபுரம் நிர்வாக மாவட்டத்தில் பலாகல பிரதேச செயலாளர் பிரிவில் தெற்கு கலாகம் பத்து/ கோரளயில் 691-கம்சபாஹல்மில்லவெவ கிராம அலுவலர் பிரிவில் - எனும் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள - என்பவரின் பொறுப்பில், நில அளவையியலாளர் நாயகத்தின் பதிவு இலக்கம் - கொண்ட புல வரைபடத்தில்/ - ஆல் பதியப்பட்ட இலக்கம் - ஐக் கொண்ட முகாமைத்துவ வரைபடத்தில்/ - ஆல் பதிவு செய்யப்பட்ட இலக்கம் - கொண்ட நிரல் வரைபடத்தில் இலக்கம் கொண்ட நிலப்பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவில் 0.370 ஹெக்டயார் என அளவைக் கொண்ட கீழ்க்காணப்படுகின்றவாறான எல்லைகளைக் கொண்ட காணி :

வடக்கு : டபிள்யூ. எம். அபேரத்ன அவர்களுடைய காணி ;
கிழக்கு : டீ. ஜீ. எல்பிநோனா அவர்களது காணி ;
தெற்கு : அஷோக சிரிவர்தன அவர்களது காணி ;
மேற்கு : கலாவெவ-கலேவல பாதை.

ஏ. எஸ். பண்டார,
பிரதேச செயலாளர்,
பலாகல.

பிரதேச செயலகம்,
பலாகல,
2021, மாச்சு 22.

08-337/ 5

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதவிய பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஜகுபர்தீன் றூழியுதீன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1987.07.22 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அனு/ப்ர/ 18614 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான அபேசிங்ஹபுர-365 எனும் முகவரியில் வசிக்கும் மணிமெல் மட்ட சலன் டீ சில்வா என்பவருக்கு கையளிக்கப்பட்டு அனுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 302/ 62 ஆம் இலக்கத்தின்கீழ் 1998.05.26 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2021.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அநுராதபுரம் நிர்வாக மாவட்டத்தின் பதவிய பிரதேச செயலாளர் பிரிவின் உதுரு குருளுபற்றில்/அதிகாரம் 31ஆ கிராம அலுவலர் பிரிவில் அபேசிங்ஹபுர-பதவிய சீ யாய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் .......................................... என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு ....................................... ஆம் இலக்க துண்டு பிரிக்கும்

*வரைபடத்தில் ............................... இலக்கம் ரீ. பீ. பீ. 20 – என்பவரால் தயாரிக்கப்பட்டு இரேகை வரைதலில் – ஆம் இலக்க 5069 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 2 ஏக்கர் 0 றூட் 3 பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு,*

மேட்டுக் காணி :

*வடக்கு : காணித்துண்டு இலக்கம் 5070 ;*
*கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 5085 ;*
*தெற்கு : கூடுதல் 05 ;*
*மேற்கு : காணித்துண்டு இலக்கம் 5068.*

ஜே. ரழியுதீன்,
பிரதேச செயலாளர்,
பதவிய.

*பிரதேச செயலகம்,*
*பதவிய,*
*2020, நவெம்பர் 30.*

*08-337/6*

---

*இணைப்பு 9*

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதவிய பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஜகுபர்தீன் றழியுதீன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1987.07.22 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அனு/ப்ர/18624 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான அபேசிங்ஹபுர-349 எனும் முகவரியில் வசிக்கும் கொழும்பு மோதர பரண பட்டபெதகே தோமஸ் பிரேரா என்பவருக்கு கையளிக்கப்பட்டு அனுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 52/201 ஆம் இலக்கத்தின்கீழ் 1995.02.03 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தினால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2021.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*அநுராதபுரம் நிர்வாக மாவட்டத்தின் பதவிய பிரதேச செயலாளர் பிரிவின் உதுரு குருளுபற்றில்/அதிகாரம் 31ஆ கிராம அலுவலர் பிரிவில் அபேசிங்ஹபுர-பதவிய சீ யாய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் .......................................... என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு ...................................... ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் ............................... இலக்கம் ரீ. பீ. பீ. 20 – என்பவரால் தயாரிக்கப்பட்டு இரேகை வரைதலில் – ஆம் இலக்க 5093 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 1 ஏக்கர் 3 றூட் 3 பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு,*

மேட்டுக் காணி :

*வடக்கு : காணித்துண்டு இலக்கம் 5086, 5084, 5094 ;*
*கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 5108 மற்றும் 5094 ;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கம் 5092, 5108 ;*
*மேற்கு : காணித்துண்டு இலக்கம் 5086, 5087, 5092.*

ஜே. ரழியுதீன்,
பிரதேச செயலாளர்,
பதவிய.

*பிரதேச செயலகம்,*
*பதவிய,*
*2020, நவெம்பர் 30.*

*08-337/7*

*இணைப்பு 9*

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதவிய பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஜகுபர்தீன் றழியுதீன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1987.07.22 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அனு/ப்ர/18613 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான அபேசிங்ஹபுர (பதவிய சீ யாய இலக்கம் 367 எனும் முகவரியில் வசிக்கும் வீரகோன் முதியன்சேலகே கிரிபண்டா என்பவருக்குக் கையளிக்கப்பட்டு அனுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 302/61 ஆம் இலக்கத்தின்கீழ் 1998.05.26 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தினால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2021.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*அநுராதபுரம் நிர்வாக மாவட்டத்தின் பதவிய பிரதேச செயலாளர் பிரிவின் உதுரு குருளுபற்றில்/அதிகாரம் 31ஆ கிராம அலுவலர் பிரிவில் அபேசிங்ஹபுர-பதவிய சீ யாய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் .......................................... என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு ....................................... ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் ............................... இலக்கம் ரீ. பீ. பீ. 20 - என்பவரால் தயாரிக்கப்பட்டு இரேகை வரைதலில் - ஆம் இலக்க 5067 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 2 ஏக்கர் 0 றூட் 1 பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு,*

மேட்டுக் காணி :

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 5065 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 5071 மற்றும் 5070 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 5068 ;
மேற்கு : கூடுதல் 5

*ஜே. ரழியுதீன்,*
*பிரதேச செயலாளர்,*
*பதவிய.*

*பிரதேச செயலகம்,*
*பதவிய,*
*2020, நவெம்பர் 30.*

*08-337/8*

---

## நானாவித காணி அறிவித்தல்கள்

*காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/67567.*
*மாகாணக் காணி ஆணையாளரின்*
இல. : NWP/PLC/L9/AB/LTL/12.

### *முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*குருநாகல் மாவட்டம், அம்பன்பொல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 162, உடாகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நீதரமுல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ள காலனி அதிகாரியினால் வரையப்பட்ட வரைபடத்தில் இலக்கம் 113 காணித்துண்டில் ஒரு பகுதி காட்டப்பட்டுள்ளதும், 00 ஏக்கர் 01 றூட் 10 பேர்ச்சஸ் (விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியின் ஒரு பகுதி* Apline Clothing yappahuwa (private) Limited *இற்கு எனது இலக்கம் 4/10/51266 இன் அடிப்படையில் நீண்டகால குத்தகை தளத்தின் கீழ் விரிவாக்கப்பட்ட தொழிற்சாலையை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக குறிப்பிட்ட காலத்திற்குக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு விண்ணப்பித்திருப்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.*

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அனுராதபுரம், பாதனிய பிரதான வீதியிலிருந்து வெடுரெஸ்ஸ வரை சாலை முன்பதிவை அணுகலாம் ;
கிழக்கு : இலக்கம் 112 ;
தெற்கு : இலக்கம் 114 ;
மேற்கு : இலக்கம் 113.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கு அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர்) அங்கீகரித்த 2021.07.15 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2021 ஆம் வருடத்திற்கான காணியின் மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூ. 5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் 2% ஆகும். 2021 ஆம் வருடத்திற்கான விலைமதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ. 5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டின் அடிப்படையில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இது வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) தவணைப்பணம்.- அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(ஈ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(உ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்யப்படும் ;

(ஏ) 2021.07.15 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவுபெறும் வரையினுள் சபைக்குள் கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது ;

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

எஸ். ஏ. கலானி எம். தனசேகர,
துணைக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஓகத்து 20.

08-262

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/65120.
பிரதிக் காணி ஆணையாளரின்
இல. : EP/28/LB/LS/Tri/ KUC/106.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புல்மூடை 04 கிராம அலுவலர் பிரிவில் புல்மூடை கிராமத்தில் அமைந்துள்ளது. வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் Tri/KUC/2019/178 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0672HEC விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக மத்திய வங்கி-புல்மூடை குத்தகைக்குத் தருமாறு இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : ராமநாதன்குலக்காடு தோட்டக்கலை நிலை ;
கிழக்கு : ராமநாதன்குலக்காடு தோட்டக்கலை நிலை ;
தெற்கு : முல்லைத்தீவு தொடக்கம் திருகோணமலை பிரதான பாதை (வீ. அ. அ. ச.) ;
மேற்கு : ராமநாதன்குலக்காடு தோட்டக்கலை நிலை.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்டும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்டும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2021.07.22 ஆந் திகதி தொடக்கம்) ;

**வருடாந்தக் குத்தகை**.- குறித்த வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில், குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட அபிவிருத்தியடையாத பெறுமதியில் 2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட அபிவிருத்தியடையாத பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்தக் குத்தகைப் பணத்திற்கு 20% கூட்டிக்கொள்ளுதல் வேண்டும்.

**தவணைப் பணம்**.- அறவிடப்பட மாட்டாது ;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(ஈ) பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 05 வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும் ;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

எம். எல். ஏ. சன்ஜீவ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஓகத்து 20.

08-282

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/67878.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : எல்சீ/ஏஎன்/12/ஆர்ஜே/எலரி/43.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அனுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 448, அடங்கமுவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அங்கமுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள எப்வீபி 439 பிற்சேர்க்கை இல. 38 தாள் 40 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 1189 ஆம் இலக்க 2.3089 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு ரிட்ஸ் க்கோனிங் ராஜாங்கனய பயிவ் பயிவ்வயிங் (பீவீரீ) எல்ரீடி கம்பனி விண்ணப்பிள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டுகள் இலக்கங்கள் 730, 738, 739 மற்றும் 740 மற்றும் 935 ;
கிழக்கு : காணித்துண்டுகள் இலக்கங்கள் 739, 740, 935 மற்றும் 1191 ;
தெற்கு : காணித்துண்டுகள் இலக்கங்கள் 1191 மற்றும் 1190 ;
மேற்கு : காணித்துண்டுகள் இலக்கங்கள் 1190 மற்றும் 730.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கு அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2021.07.15 ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.-** 2021 ஆம் வருடத்திற்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூ. 5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 2% ஆகும். 2021 ஆம் வருடத்திற்கான விலைமதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ. 5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்படும் குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) *தவணைப்பணம்.-* அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மாகாணக் காணி ஆணையாளர் / பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஊ) 2021.07.15 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் காணியை குத்தகைக்கு எடுத்த நோக்கத்தை நிறைவுசெய்கின்ற கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் மட்டுமே அனுமதிக்கப்படும் ;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஏ. கே. ஏ. செவ்வந்தி அமரசேகர,
உதவி காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஓகத்து 20.

08-334

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.